PRIMARY SCHOOL

# TAMIL LANGUAGE

தொடக்கநிலை 6

பெயர் : ______________________ [ ]


வகுப்பு : Primary 6 ______ தேதி : ______

நேரம் : 1h 40 min ______ பெற்றோர் கையொப்பம் : ______

| | தலைப்பு | பெறவேண்டிய மதிப்பெண் | பெற்ற மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | வேற்றுமை | 12 | |
| 2 | செய்யுள்/பழமொழி | 12 | |
| 3 | தெரிவுவிடைக் கருத்தறிதல் | 10 | |
| 4 | சொற்பொருள் | 6 | |
| 5 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் | 6 | |
| 6 | ஒலி வேறுபாட்டுச் சொற்கள் | 10 | |
| 7 | முன்னுணர்வுக் கருத்தறிதல் | 14 | |
| 8 | கருத்தறிதல் | 20 | |
| | மொத்தம் | 90 | |

வினா 2

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை/ கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்.




உதவிச் சொற்கள்

| | |
|---|---|
| இடைவேளை நேரம் | விழுந்தாள் |
| தூக்கி விட | சாக்கடை |
| இரும்புக் கம்பி | காசு |
| ஒத்துழைத்து | நன்றியுடன் |

## A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான **வேற்றுமை உருபு** ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

ஒரு காட்டில் மைனா ஒன்று வாழ்ந்து வந்தது. அது பாட்டுப் பாடுவதை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருந்தது. அந்த _____(1)_____ போட்டி போட யாரும் இல்லை. அதனால், அதன் _____(2)_____ மற்ற விலங்குகள் ரசித்து வந்தன. இதனால் அதற்குக் கர்வம் ஏற்பட்டது. ஒரு நாள், இன்னொரு _____(3)_____ குயில் ஒன்று மைனா வாழ்ந்த காட்டிற்கு வந்தது. மைனா வழக்கம்போல் ஒரு _____(4)_____ கிளையில் அமர்ந்து பாட ஆரம்பித்தது. எல்லா விலங்குகளும் கூடின. பாடலைக் கேட்ட _____(5)_____ சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. மைனா பாடி முடித்தது. சிறிது நேரம் கழித்து குயில் தன் குரல் _____(6)_____ காட்ட விரும்பியது. குயிலின் பாடலோசை தேனிசையாக அமைந்தது. எல்லா மிருகங்களும் மெய்மறந்து ரசித்தன. மைனா வெட்கித் தலை குனிந்தது.

Q1. 1) மைனாவை

2) மைனாவால்

3) மைனாவுடன்

4) மைனாவுடைய

Q2. 1) பாடலில்

2) பாடலை

3) பாடலால்

4) பாடலுக்கு

Q3. 1) வனத்தை

2) வனத்தில்

3) வனத்துக்கு

4) வனத்திலிருந்து

Q4. 1) மரத்தை

2) மரத்தின்

3) மரத்தில்

4) மரத்தால்

Q5. 1) குயிலில்

2) குயிலை

3) குயிலால்

4) குயிலிலிருந்து

Q6. 1) வளத்தை

2) வளத்தால்

3) வளத்துக்கு

4) வளத்துடன்

## A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள **செய்யுள்/பழமொழியை** நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7. மகன்தந்தைக்கு ஆற்றும் ________________ இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

1) அன்பு
2) நன்றி
3) உதவி
4) கடமை

Q8. ________________ பலவான் ஆவான்.

1) கற்றவன்
2) நல்லவன்
3) வல்லவன்
4) புத்திமான்

Q9. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது ________________.

1) பரிவு
2) அரிது
3) அறிவு
4) இனிது

Q10. அளவுக்கு மிஞ்சினால் ________________ நஞ்சு.

1) பழமும்
2) இனிப்பும்
3) மருந்தும்
4) அமுதமும்

Q11. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது ________________.

1) சிறப்பு
2) வழக்கு
3) இழுக்கு
4) இழிவு

Q12. சுடினும் செம்பொன் ________________ கெடாது.

1) சுயவொளி
2) எதிரொளி
3) சுடரொளி
4) தன்னொளி

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஓர் ஊரில் பல்லவன் என்னும் வியாபாரி வாழ்ந்து வந்தான். அவனுக்கு அடிக்கடி மூக்குக்குமேல் கோபம் வரும். பல்லவனிடம், உதயன் என்று அழைக்கப்படும் ஒரு தொழிலாளி வேலை செய்து வந்தான். அவன் ஓர் அப்பாவி. பல்லவன் இதைச் சாதகமாகப் பயன்படுத்தி உதயனை அடித்துத் துன்புறுத்துவான்.

ஆனால், தன் முதலாளியை எதிர்த்துப் பேசவோ, அடிக்கவோ அவனுக்குத் தைரியம் இல்லை. பல்லவனைப் பார்த்தாலே அவனுக்குக் கிலி ஏற்படும். ஆனாலும், உதயன் முதலாளியைத் தெய்வமாகப் போற்றி வந்தான். சிறு வயதில் தனது பெற்றோர் இறந்ததிலிருந்து பல்லவன்தான் அவனை ஆதரித்து வந்தான். அதனால், தன் முதலாளி மீது அவன் எல்லையில்லா விசுவாசம் வைத்திருந்தான்.

அந்த ஊருக்கு இன்னொரு வியாபாரி புது வியாபாரம் ஒன்றைத் தொடங்க வந்திருந்தான். அவனுடைய கடை பல்லவனுடைய கடைக்குப் எதிரே இருந்தது. புது வியாபாரி தில்லுமுல்லு செய்வதில் வல்லவன். அவனுடைய கடைக்கு ஒரு தொழிலாளி தேவைப்பட்டது. வியாபாரி, உதயனைத் தனது கடையில் குறைந்த சம்பளத்துக்கு வேலையில் அமர்த்த நினைத்தான். ஒரு முறை உதயன் செய்த தவற்றுக்காக பல்லவன் அவனைக் கடைக்கு வெளியே தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தித் திட்டினான். மேலும், அவனை அடியோ அடி என்று அடித்தான். வழக்கம்போல் உதயன் பூனையைப்போல் ஒடுங்கி தன் வேலையைத் தொடர்ந்து செய்தான். வேலை முடிந்ததும் வீட்டுக்குக் கிளம்பினான். இதுதான் தக்க தருணம் என்று புது வியாபாரி எண்ணி உதயனைப் பின்தொடர்ந்து சென்றான். இதைக் கவனித்த

பல்லவன் இருவரையும் பின்தொடர்ந்தான். புது வியாபாரி உதயனிடம் சென்று,"ஏன் இப்படி அவமானப்பட்டு வாழ்கிறாய்? நீ என்னுடன் வா, உன்னை நல்ல விதமாகக் கவனித்துக்கொள்கிறேன்," என்று சொன்னான். பக்கத்தில் மறைந்திருந்த பல்லவன் இவற்றையெல்லாம் கேட்டான்.

அதற்கு உதயன், "ஐயா! உங்கள் அக்கறைக்கு மிக்க நன்றி. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். எனக்கு அன்னை, பிதா, தெய்வம் எல்லாமே என் முதலாளிதான். மீண்டும் என்னிடம் இதைப் பற்றிப் பேசாதீர்கள்," என்று பதிலளித்தான். உதயன் தன்மேல் உள்ள விசுவாசத்தை உணர்ந்து பல்லவன் மெய்சிலிர்த்துப் போனான். தன்னை அறியாமலேயே அவன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

*(மூலம் : மாணவர் முரசு)*

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. பல்லவன் எதனால் உதயனைத் துன்பறுத்தினான் ?

1) உதயன் ஓர் அப்பாவி என்பதால்
2) உதயன் முன்கோபக்காரன் என்பதால்
3) உதயன் புதிய வியாபாரம் ஆரம்பித்ததால்
4) உதயன் அவனுடைய தொழிலாளி என்பதால்

( ? )

Q14. உதயன் பல்லவன் மீது விசுவாசத்துடன் இருந்ததற்குக் காரணம் என்ன ?

1) பல்லவனைத் தெய்வமாக நினைத்ததே
2) உதயனுடைய பெற்றோர் இறந்து போனதே
3) பல்லவனை எதிர்த்துப் பேச தைரியம் இல்லாததே
4) பல்லவன் உதயனைச் சிறு வயதிலிருந்து ஆதரித்து வந்ததே

Q15. கடையைத் தொடங்கிய புது வியாபாரி என்ன செய்ய நினைத்தான்?

1) தில்லுமுல்லு செய்ய நினைத்தான்.
2) புது வியாபாரம் தொடங்க நினைத்தான்.
3) உதயனை தன் கடையில் வேலைக்கு அமர்த்த நினைத்தான்.
4) பல்லவனின் கடைக்கு எதிரே ஒரு கடை வைக்க நினைத்தான்.

Q16. உதயனிடம் பேச புது வியாபாரிக்குத் தக்க தருணம் எப்போது ஏற்பட்டது ?

1) பல்லவன் உதயனைத் திட்டியபோது
2) உதயன் அறியாமல் ஒரு முறை தவறு செய்தபோது
3) உதயன் வேலை முடிந்து வீட்டுக்குக் கிளம்பியபோது
4) உதயன் பூனையைப்போல் ஒடுங்கி வேலையைத் தொடர்ந்து செய்தபோது

Q17. பல்லவன் ஏன் ஆனந்தக் கண்ணீர் விட்டான் ?

1) பல்லவனுக்கு மெய்சிலிர்த்துப் போனதால்
2) புது வியாபாரி உதயன்மீது அக்கறை காட்டியதால்
3) உதயன் பல்லவனைத் தெய்வம் என்று குறிப்பிட்டதால்
4) உதயன் பல்லவன்மீது வைத்திருந்த விசுவாசத்தை உணர்ந்ததால்

## B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் **பொருளை** உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(6 மதிப்பெண்கள்)

Q18. கிலி

1) பயம்
2) திகில்
3) அதிர்ச்சி
4) ஆச்சரியம்

Q19. விசுவாசம்


1) பாசம்
2) மரியாதை
3) நம்பிக்கை
4) நன்றியுணர்வு

Q20. தருணம்


1) நேரம்
2) வாய்ப்பு
3) காரணம்
4) சந்தர்ப்பம்

**B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :







# சிங்கையில் 'மெகா ஜீனி' அமெரிக்க நிறுவனம்

# 'மெகா ஜீனி'

சிக்காகோ(Chicago) மாநிலத்தின் புகழ்பெற்ற கணினி நிறுவனமான 'மெகா ஜீனி' இப்போது உங்கள் இல்லம் தேடி வருகிறது. மலேசியாவில் தன் முதல் ஆசியக் கிளையைத் திறந்த இந்நிறுவனம் இப்போது சிங்கையிலும் தன் சேவையை வழங்க உள்ளது.

அதிகாரத்துவத் திறப்புவிழா : 12-05-**2013**

[illegible] தேவையே எங்கள் சேவை!

**வழங்கப்படும் சேவைகள்:**

1) மடிக்கணினி / கணினி பழுதுபார்க்கும் சேவை
2) இல்லங்களில் / அலுவலகங்களில் இணையத்தைப் பொருத்தும் சேவை
3) மடிக்கணினி / கணினி வாங்குதலும் விற்றலும்

குறிப்பு :

திறப்புவிழாவில் கலந்துகொள்ளும் முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு ஒரு கணினி வட்டு இலவசம்.

இடம் : காலாங் கணினி மையம் (காலாங் பெருவிரைவு ரயில் நிலையத்துக்கும் கேலாங் சாலைக்கும் நடுவில் அமைந்துள்ளது)

சேவை நேரம் : காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொதுவிடுமுறை நாட்களிலும் சேவை வழங்கப்படாது)

தொடர்புகொள்ள வேண்டிய எண் : 98357628 / 98267538

*மின்னஞ்சல் முகவரி:* *www.megagenie@yahoo.com*

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. 'மெகா ஜீனி' நிறுவனம் முதன்முதலில் எந்த நாட்டில் சேவை வழங்கியது?

1) சிங்கப்பூரில்
2). மலேசியாவில்
3) அமெரிக்காவில்

Q22. 'மெகா ஜீனி' நிறுவனத்தில் வழங்கப்படாத சேவை எது?

1) மின்னஞ்சல் முகவரி உருவாக்குதல்
2) மடிக்கணினியையும் கணினியையும் பழுதுபார்த்தல்
3) மடிக்கணினியையும் கணினியையும் வாங்குதல் மற்றும் விற்றல்

Q23. எப்போது கணினி வட்டு இலவசமாக வழங்கப்படும்?

1) ஞாயிற்றுக்கிழமைகளில்
2) பொதுவிடுமுறை நாட்களில்
3) திறப்புவிழா நடைபெறும் நாளில்

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (10 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| Q24. | நம் பள்ளிக் காற்பந்துக் குழு காற்பந்துப் போட்டியில் முதல் நிலையை அடைந்தது. தலைமையாசிரியர் குழுவினரைப் பாராட்டி ஓர் __________ நிகழ்த்தினார். | Q24. ( ) |
| Q25. | என் மாமா அதிக பலம் படைத்தவர். __________ தூக்கும் போட்டியில் அவர் வெற்றி பெற்றதால் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. | Q25. ( ) |
| Q26. | இந்தியாவின் ஒரு பகுதியில் பழங்காலத்துக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் __________ எழுத்துகள் தமிழ் எழுத்துகள் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். | Q26. ( ) |
| Q27. | விஜயன் வேட்டை ஆடுவதில் திறமைசாலி. அவனுடைய வில்லிலிருந்து புறப்பட்ட __________ குறி தவறாமல் மானைத் தாக்கியது. | Q27. ( ) |
| Q28. | குதிரைச் சவாரி செய்த ரகு எதிர்பாராத விதமாகக் கீழே விழுந்தான். அதனால், அவன் __________ தாங்க முடியாமல் அழுதான். | Q28. ( ) |

| | | | |
|---|---|---|---|
| (1) | கனம் | (2) | பொரிக்கப்பட்ட |
| (3) | பொறிக்கப்பட்ட | (4) | உறை |
| (5) | பாணம் | (6) | வழி |
| (7) | உரை | (8) | கணம் |
| (9) | வலி | (10) | பானம் |

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ஓர் ஊரில் வர்மன் என்ற ஓவியன் ஒருவன் வாழ்ந்து வந்தான். தன்னைவிட சிறந்த ______(Q29)______ உலகில் யாரும் இல்லை என்ற எண்ணம் அவனிடம் மிகுந்திருந்தது. அவனிடம் திறமைமிக்க சீடன் ஒருவன் இருந்தான். மற்ற ஓவியர்கள் சீடனை ______(Q30)______ கண்ட வர்மனுக்குப் பொறாமை ஏற்பட்டது. தன் சீடனை அவமானப்படுத்தும் ______(Q31)______ எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். | Q29. ( )<br>Q30. ( )<br>Q31. ( ) |
| ஒரு நாள், ஓர் ஓவியக் கண்காட்சியில் பல புகழ்பெற்ற ஓவியர்கள் ______(Q32)______. அப்போது வர்மன் தன் சீடனிடம், "சீடா, ஒரு தேவதை உன் முன் தோன்றி உனக்குப் பொற்காசுகள் வேண்டுமா? ஓவியக்கலையில் சிறந்து விளங்கும் ஆற்றல் வேண்டுமா? என்று கேட்டால் நீ என்ன பதிலளிப்பாய்?" என்று ______(Q33)______. சீடன் உடனே, "பொற்காசுகளைத்தான் கேட்பேன்," என்று சொன்னான். வர்மன் ______(Q34)______ நகைத்தான். "அழியாக் கலையைவிட அழியக்கூடிய செல்வத்தை விரும்பும் உனக்குக் கலைஞனாக இருப்பதற்குத் தகுதியில்லை. நான் தேவதையிடம் கலைஞானத்தையே கேட்டிருப்பேன்," என்றான் வர்மன். | Q32. ( )<br>Q33. ( )<br>Q34. ( ) |

| | |
|---|---|
| சீடன் மிக அடக்கமாக, "எது தமக்கு ______(Q35)______ அதைத்தானே எல்லாரும் கேட்பார்கள்," என்றான். கண்காட்சியில் இருந்தவர்கள் அதைக் கேட்டுச் சிரித்தார்கள். வர்மன் வெட்கித் தலை குனிந்தான்.<br>*(மூலம் : மாணவர் முரசு)* | Q35. ( ) |

| | | |
|---|---|---|
| (1) இல்லையோ | (2) சொன்னான் | (3) கூடியிருந்தனர் |
| (4) ஏளனமாக | (5) கலைஞன் | (6) அறிவாளி |
| (7) வினவினான் | (8) புகழ்வதை | (9) சந்தர்ப்பத்தை |
| (10) செய்திருந்தனர் | (11) மணியை | (12) உள்ளதோ |

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஓர் ஊரின் எல்லையில் அடர்ந்த கானகம் ஒன்று இருந்தது. சிங்க ராஜாவின் தலைமையில் அக்காட்டு விலங்குகள் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தன. சிங்க ராஜா நீதி தவறாமல் காட்டை ஆண்டது. இதனால் மற்ற விலங்குகள் சிங்க ராஜாமீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தன. சிங்க ராஜாவின் நெருங்கிய நண்பனான கரடி ஆலோசனைகள் கூறும் மந்திரியாகவும் விளங்கியது.

ஒரு நாள் விலங்குகள் அனைத்தும் கானகத்தில் கூட்டம் போட்டன. தங்கள் இனங்கள் அனைத்தும் அழிந்து வருவதை எண்ணி வருந்தின. இதற்கு உடனே ஒரு தீர்வு காண வேண்டும் என்பதால் அவை எல்லாம் சேர்ந்து சிங்க ராஜாவிடம் முறையிடச் சென்றன. அப்போது சிங்க ராஜா கரடியுடன் பரமபதம் (snake and ladder) விளையாடிக்கொண்டிருந்தது. விலங்குக் கூட்டத்தைக் கண்ட இரண்டும் திகைத்து நின்றன. சிங்கம் கூட்டத்தைக் கண்டு, "என்ன நண்பர்களே! ஏன் இந்தத் திடீர் கூட்டம்? ஏதேனும் பிரச்சினையா?" என்று வினவியது.

அப்போது ஒரு முயல், "மன்னா! பூச்சிப் புழுக்களைக் குருவிகள் இரையாக்கிக் கொள்வதும்; ஆடு, மான், பசு முதலியவற்றைப் பெரிய விலங்குகள் உண்பதும்; தவளை, எலி போன்றவற்றைப் பாம்புகள் இரையாக்கிக்கொள்வதும்; வழக்கமாக நடப்பவை தானே!" என்றது. அதற்குச் சிங்கம், "ஆம். நீ சொல்வது சரிதான். இது இயற்கையிலேயே நடப்பதுதான்," என்றது. அதற்கு முயல், "மன்னா, இந்த மனிதர்கள் மட்டும் நம்மை அநியாயமாக வேட்டை ஆடுகிறார்கள். தங்களுடைய உணவுத் தேவைகளுக்கு மட்டுமில்லாமல்; நம் கொம்புகள், உரோமம், தந்தங்கள், தோல் முதலியவற்றை வியாபாரத்துக்காக விற்று எங்களைப்

பலியாக்குகிறார்கள். இதில் சுயநலமே அதிகமாக உள்ளது. இதனால் நாம் அனைவரும் முழுமையாக அழிந்துபோகும் பரிதாப நிலை ஏற்படுகிறது," என்று துன்பக்குரலில் கூச்சலிட்டது.

இதைக் கேட்ட சிங்கம் சினத்துடன் எழுந்து, "இந்த மனிதர்கள் செய்யும் கொடுமைகளுக்கு ஒரு முடிவு கட்டுகிறேன்," என்று கூறி கர்ஜித்தது. இதைக் கேட்ட கரடி, "பொறுத்திடு நண்பா. மனிதர்களைத் துரத்துவது சுலபமல்ல. அதற்கு நாம் திட்டமிட்டுச் செயல்படவேண்டும். அவர்களை வெல்ல வேண்டும் என்றால் நம் பலத்தைப் பயன்படுத்துவதைவிட அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறியது.

*(மூலம் : மாணவர் முரசு)*

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

Q36. கானகம் எங்கே அமைந்திருந்தது? (2 ம)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q37. சிங்க ராஜாவின்மீது மற்ற விலங்குகள் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்ததற்குக் காரணம் என்ன? (3 ம)

Q38. மற்ற விலங்குகள் ஏன் சிங்க ராஜாவிடம் முறையிடச் சென்றன? (3 ம)

Q39. சிங்கம் எவை இயற்கையிலேயே நடப்பவை என்று கூறியது? (4 ம)

Q40. சிங்கம் ஏன் அவசரப்பட்டு மனிதர்களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று கூறியது? (4 ம)

Q41. சிங்க ராஜா சினம் கொண்டதைக் கண்ட கரடி என்ன ஆலோசனை சொன்னது? (4 ம)

முற்றும்

Primary - 6 TESTPAPER 4

ஒரு காட்டில் மைனா.........

1. 2 2. 2 3. 4 4. 3 5. 3 6. 1

7. 3 8. 4 9. 3 10. 4 11. 3 12. 4

13. 1 14. 4 15. 3 16. 3 17. 4

18. 1 19. 4 20. 1

21. 3 22. 1 23. 3

24. 7 25. 1 26. 3 27. 5 28. 9

29. 5 30. 8 31. 9 32. 3 33. 7 34. 4 35. 1

36. கானகம் ஓர் ஊரின் எல்லையில் அமைந்திருந்தது.

37. சிங்க ராஜா நீதி தவறாமல் காட்டை ஆண்டதே மற்ற விலங்குகள் அதன் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்ததற்குக் காரணமாகும்.

38. விலங்குகளின் இனங்கள் அழிந்து வருவதை எண்ணி வருந்தியதாலும், அதற்கு உடனே தீர்வு காண வேண்டும் என்பதாலும் மற்ற விலங்குகள் சிங்க ராஜாவிடம் முறையிடச் சென்றன.

39. பூச்சிப் புழுக்களைக் குருவிகள் இரையாக்கிக் கொள்வதும், ஆடு, மான், பசு போன்றவற்றைப் பெரிய மிருகங்கள் உண்பதும், தவளை, எலி, போன்றவற்றைப் பாம்புகள் உணவாக்கிக்கொள்வதும் இயற்கையிலேயே நடப்பவை என்று சிங்கம் கூறியது.

40. மனிதர்கள் தங்களுடைய உணவுக்காக மட்டுமல்லாது மிருகங்களை பலியாக்கி அவற்றின் கொம்புகள், உரோமம், தந்தங்கள், தோல் முதலியவற்றை எடுத்து வியாபாரத்துக்காக விற்று சுயநலத்தோடு நடந்துகொள்வதால் விலங்கினம் முழுமையாக அழிந்துபோகும் பரிதாப நிலை ஏற்படுகிறது. அதனால் அவற்றைக் காக்க சிங்கம் அவசரப்பட்டு மனிதர்களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கூறியது.

41. மனிதர்களைத் துரத்துவது சுலபமானதல்ல என்றும் அதற்குத் திட்டமிட்டு செயல்படுவதோடு அவர்களை வெல்ல பலத்தைப் பயன்படுத்துவதைவிட அறிவைப் பயன்படுத்தவேண்டும் என்று சினம் கொண்ட சிங்க ராஜாவுக்கு கரடி ஆலோசனை சொன்னது.